தேசிய நூலக ஆவணவாக்கள் சேவைகள் சபை
புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

NATIONAL LIBRARY OF SRI LANKA
N L S L

# வெற்றிடங்கள்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்ப தகுதியான விண்ணப்பதார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி : தகவல் உதவியாளர தரம் iii (வெற்றிடம் 03)**

சேவை வகுதி : முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) சேவை வகுதி (MA 2-1)

சம்பளம் :MA 2-1-2025 ரூ:50,540-10x540-07x630-04x890-20x1,190- 87,710/= (மாதாந்தம்)

(மு.சே.சு.எண்01/2025 இன்படி 2025.01.01 திகதியில் ரூ:43,379/=வும், 2026.01.01 திகதியில் ரூ:46,960/= வும் மற்றும் 2027.01.01 திகதியிலிருந்து ரூ 50,540/=வும் ஆக சம்பளம் வழங்கப்படும்.)

வயது : 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (உள்தாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

தகமைகள் :

வெளிவாரி விண்ணப்பதாரிகள்
கல்வித் தகமைகள்

(அ). கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
- i. சிங்களம் / தமிழ் மொழி
- ii. கணிதம்
- iii. ஆங்கில மொழி உட்பட நான்கு (04) பாடங்களில் திறமை சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

(ஆ). கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தது மூன்று (03) பாடங்களில் (சாதாரன பொதுப் பரீட்சைத் தவிர) சித்தியடைந்திருத்தல்

(இ) கணினி பயன்பாடுகள் தொடர்பில் மூன்று (03) மாதங்களுக்குக் குறையாத கற்கைநெறியொன்றில் சித்தியடைந்திருத்தல் மற்றும் சபையினால் நடத்தப்படும் தொழில்சார் பரீட்சையில் (Trade Test) சித்தியடைந்திருத்தல்.

தொழில்நுட்ப திறன்கள் / தேர்ச்சி

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / இலங்கை நூலக சங்கம் ஒன்றின் நூலக தகவல் விஞ்ஞானம் மூன்று (03) வருட டிப்ளோமா கற்கைநெறியின் முதல் மட்டத்தில் சித்தியடைந்திருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளின் தகமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. (அ) ஆரம்ப தரத்தில் - தேர்ச்சியற்ற (PL 1), அரை தேர்ச்சி (PL 2) மற்றும் தேர்ச்சி பெற்ற சேவை வகுதியில் (PL3) ஐந்து வருட (05) காலம் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
- i. சிங்களம் / தமிழ் மொழி
- ii. கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

(இ) கணினி பயன்பாடுகள் தொடர்பில் மூன்று (03) மாதங்களுக்குக் குறையாத கற்கைநெறியொன்றில் சித்தியடைந்திருத்தல் மற்றும் சபையினால் நடத்தப்படும் தொழில்சார் பரீட்சையில் (Trade Test) சித்தியடைந்திருத்தல்.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / இலங்கை நூலக சங்கம் ஒன்றின் நூலக தகவல் விஞ்ஞானம் மூன்று (03) வருட டிப்ளோமா கற்கைநெறியின் முதல் மட்டத்தில் சித்தியடைந்திருத்தல்.

ஆட்சேர்ப்பு முறை : எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 70% வெளிவாரி விண்ணப்பதாரிகளிடமிருந்தும் மற்றும் 30% உள்வாரி விண்ணப்பதாரிகளிடமிருந்தும் விகிதாசார அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

சகல விண்ணப்பதாரர்களும்,

அ. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ. பதவிக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்வதற்கும், நாட்டின் எப் பகுதியிலும் வேலை செய்வதற்கும் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இ. சிறந்த நன்னடத்தைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

சேவை நிபந்தனைகள் :

1. இப் பதவி நிரந்தரமானதுடன் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களினால் 8% செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் தொழில் வழங்குனரால் 12% மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கு செலுத்தப்படும்.

மேற்படி பதவிகளுக்கான கடமை நிலையம் : கொழும்பு

முழுமையான சுய விபரத் தகவல்கள் தமது கல்வி / தொழில் தகமைகள், சேவை அனுபவங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் தமது தகவல்களை சரிபார்க்கக்கூடிய உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர், முகவரி மற்றும் தொலைப்பேசி இலக்கத்தை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவத்துடன் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து “தலைவர், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல 14, சுதந்திர வழி, கொழும்பு 07” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.06.05 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

அரச/ அரச சார்ந்த / நியாயாதித்த நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை திணைக்கள / நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட சகல விடயங்களையும் பூர்த்தி செய்திராத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

தலைவர்
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
இல 14, சுதந்திர வழி, கொழுப்பு 07
Website : www.natlib.lk